நாள்: 15.07.2014

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தினமலர்**

## மேட்டூர் அணையில் மீன்வளம் குறைவு: கரையோரம் முகாமிட்டுள்ள மீனவர்கள்

**மேட்டூர்**: மேட்டூர் அணையில் மீன்வளம் குறைந்ததால், மீனவர் குடும்பத்தினர், கிராமத்தை விட்டு வெளியேறி, பிழைப்புக்காக காவிரிக் கரையோரம் முகாமிட்டுள்ளனர்.

மேட்டூர் அணையின் மொத்த நீர்மட்டம், 120 அடி. அணையில், மீன்வளத் துறை உரிமம் பெற்று, 2,000 மீனவர்கள் மீன் பிடிக்கின்றனர். மீன்வளத்தை பெருக்க, மீன்வளத் துறை சார்பில், ஆண்டுதோறும், 25 லட்சம் கட்லா, மிர்கால், ரோகு இன மீன் குஞ்சுகள், மேட்டூர் அணையில் விடப்படும். எனினும், சமீபகாலமாக, அணை நீர்மட்டம் குறைந்ததாலும், சிறிய ஆயவலை பயன்படுத்தி, சில மீனவர்கள் சட்டவிரோதமாக மீன் குஞ்சுகளை பிடித்து, கருவாடாக்கி விற்பனை செய்ததாலும், அணையில் மீன் உற்பத்தி குறைந்து விட்டது; இதனால், பாதிக்கப்பட்ட மீனவர்கள், கர்நாடக மாநில நீர்நிலைகளுக்கு, மீன் பிடிக்கச் சென்று விட்டனர். அணையின் ஒரு கரையில் உள்ள சேலம் மாவட்டத்தை சேர்ந்த மீனவர்களும், மறுகரையில் உள்ள, தர்மபுரி மாவட்ட மீனவர்களும், தங்களது குடும்பத்துடன், அங்கிருந்து வெளியேறி, மேட்டூர் அணை பண்ணவாடி காவிரி கரையோரம் முகாமிட்டு, மீன் பிடிக்கின்றனர்.

தர்மபுரி மாவட்டம், ஏமனூர் கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் கூறியதாவது: அணையில், தண்ணீர் குறைந்து விட்டதால், மீன்கள் கிடைப்பதில்லை. அதனால், எங்களது கிராமத்தை சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள், இங்கிருந்து வெளியேறி, காவிரிக் கரையோரம் முகாமிட்டுள்ளோம். குழந்தைகளை, எங்களுடன் தங்க வைக்க முடியாது என்பதால், ஹாஸ்டலில் சேர்த்து படிக்க வைக்கிறோம். தற்போது, காவிரிக் கரையோரம் கொசுக்கடி அதிகமாக உள்ளது.

கொசுக்கடியில் இருந்து தப்பிக்க, குடிலை சுற்றிலும், வலை கட்டியுள்ளோம். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## மழை இன்றி குறைந்தது மாங்காய் விளைச்சல்: தரமில்லாத காய்களால் விவசாயிகள் பாதிப்பு

**பழநி**: போதிய மழையில்லாததால் மாங்காய் விளைச்சல் குறைந்து, தரமில்லாத காய்கள் விளைவதால், வெளிமாநில விற்பனை குறைந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பழநி, ஆயக்குடி, கொடைக்கானல் ரோடு, சட்டப்பாறை உள்ளிட்ட பகுதிகளில் பலஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மாமரங்கள் உள்ளன. இங்கு விளையும் மாங்காய்கள் குத்தகைதாரர்கள் மூலம் மொத்தமாக கமிஷன் மண்டிகளுக்கு அனுப்பப்பட்டு, கோவை, ஈரோடு, பொள்ளாச்சி, கேரளா வியாபாரிகளுக்கு விற்கப்படுகிறது. இந்த ஆண்டு பழநி பகுதியில் போதிய மழையில்லாததால், மாங்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், விளைந்துள்ள மாங்காய்களில் கரும்புள்ளி, நிறம் மாறிய தன்மை ஆகியவற்றால் தரம் குறைந்துள்ளது. கடந்தாண்டு கிலோ ரூ.25 வரை விற்கப்பட்ட நிலாக்காய் (காசாக்காய்) தற்போது ரூ.15 க்கு கூட வாங்க ஆள் இல்லை என, மாங்காய் மண்டி வியாபாரிகள் புலம்புகின்றனர். வியாபாரி பாண்டிமணி கூறியதாவது: கடந்தாண்டு தினமும் 15 முதல் 25 டன் வரை சந்தைக்கு மாங்காய் வரத்து இருந்தது. காய்கள் நல்ல தரமாக இருந்ததால், கேரள வியாபாரிகள் கிலோவுக்கு 25 முதல் 30 ரூபாய் வரை விலைக்கு வாங்கிசென்றனர். ஆனால், இந்த ஆண்டு தினமும் 7 முதல் 8 டன் மாங்காய் தான் விற்பனைக்கு வருகிறது. அதுவும் கரும்புள்ளி, நிறம் மங்கியுள்ளதால், கேரள வியாபாரிகள் பழநியில் மாங்காய் வாங்குவதை நிறுத்தி விட்டனர். இதனால் பழநி மண்டியில் ஒரு கிலோ 14 முதல் 15 ரூபாய்க்கு தரம் பிரித்து விற்கிறோம். இந்த ஆண்டு மாங்காய் சீசனில் நஷ்டம் தான் ஏற்பட்டுள்ளது, என்றார்.

## பெரியாறில் கனமழை: உயர்கிறது நீர்மட்டம்

**கூடலூர்**: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில், கன மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கடந்த 3 தினங்களாக பெரியாறு

அணை நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், அணையின் நீர்மட்டம் நேற்று ஒரே நாளில் ஒரு அடி உயர்ந்து, 114.80 அடியானது. நீர்வரத்து 1954 கன அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 400 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 1693 மில்லியன் கன அடி. தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில் பெய்யும் கன மழையால், நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது. மழையளவு (மி.மீ.,): பெரியாறு 42.6, தேக்கடி 21.9

## 163 நீர்ப்பாசன திட்டங்கள் தேக்கம்

**புதுடில்லி**: "நாடு முழுவதும், 163 நீர்ப்பாசன திட்டங்கள், நிறைவேற்றப்படாமல் நிலுவையில் உள்ளன," என்று, மத்திய நீர்ப்பாசன துறை இணை அமைச்சர் சந்தோஷ் குமார் கேங்வார் கூறினார். இதுகுறித்து, ராஜ்யசபாவில், மேலும் அவர் கூறியதாவது: நிலங்களை கையகப்படுத்துவது, சம்பந்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நிவாரண பணிகளை மேற்கொள்வது, சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெறாதது, நிதியின்மை போன்ற பல்வேறு காரணங்களால், மிகப் பெரிய மற்றும் சிறிய அளவிலான, 163 நீர்ப்பாசன திட்டங்கள் நிலுவையில் உள்ளன. இந்த திட்டங்களை, விரைவில் நிறைவேற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## அதிகரிப்பு! : கொல்லிமலையில் பலா விளைச்சல்... : கூடுதல் விலையால் விவசாயிகள் மகிழ்ச்சி

**நாமக்கல்**: கொல்லிமலையில், பலா விளைச்சல் அதிகரித்துள்ளதுடன், விலையும் கூடுதலாக கிடைத்து வருவதால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில், சுற்றுலாத்தலமாக கொல்லிமலை உள்ளது. இம்மலையில், ஏராளமான அபூர்வ மூலிகை செடிகள் நிறைந்துள்ளது. கொல்லிமலையை சதுரகிரி என்றும் அழைப்பர். இங்கு, அகத்தியர், திருமூலர், போகர், கரூவூரார், காலிங்கநாதர், புலிப்பாளி, சட்டநாதர் உள்ளிட்ட 18 சித்தர்கள் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

அதற்கு சான்றாக ஏராளமான குகைகள் இங்கு அமைந்துள்ளது. மேலும், ராஜராஜசோழனின் மாமியார், செம்பியன்மாதேவி, அறப்பளீஸ்வரர் கோவிலுக்கு, தானம் வழங்கியதாக, வரலாற்று சான்றுகள் உள்ளன. சங்க இலக்கியமான குறுந்தொகை, புறநானூறு, கலித்தொகையிலும், கொல்லிமலை இடம் பெற்றுள்ளது.

கொல்லிமலை, கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி ஆண்ட நாடாகவும் திகழ்கிறது. இங்கு, ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி, பிரசித்தி பெற்ற அறப்பளீஸ்வரர் கோவில் மற்றும் கொல்லிப்பாவை என்று அழைக்கப்படும், எட்டுக்கை அம்மன் கோவிலும் அமைந்துள்ளது. இங்கு, மா, பலா, கொய்யா, அன்னாசி, மலைவாழை போன்ற பழவகைகள் சாகுபடி செய்யப்படுகிறது. பலா மரம், 500 ஏக்கருக்கும் அதிகமான அளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பலா சீஸன், ஒவ்வொரு ஆண்டும் வைகாசி துவங்கி, ஆடி மாதம் வரை மூன்று மாதங்கள் நீடிக்கும்.

இங்கு விளையும் பலாப்பழம், நாமக்கல், சேலம், ஆத்தூர், தம்மம்பட்டி, திருச்சி, கரூர், திண்டுக்கல் போன்ற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மழை காலங்களில் பூச்சி தாக்குதல் காரணமாக, உற்பத்தி குறைந்துவிடும். வறட்சி காலங்களில் மட்டுமே பலா அதிக அளவு உற்பத்தியாகும்.

தற்போது வறட்சி காரணமாக, கடந்தாண்டை காட்டிலும், பலா உற்பத்தி அதிகரித்துள்ளது. அறுவடை செய்யப்படும் பலா பழம், கொல்லிமலையில் உள்ள சோளக்காடு வாரச்சந்தையில் செவ்வாய், புதன், வெள்ளி, சனிக்கிழமையும், செங்கரை, கெம்பளம், மையங்கரையில் செவ்வாய், வெள்ளிக்கிழமையும் சந்தை கூடுகிறது.

இங்கு, ஒரு பலா குறைந்த விலையாக, 50 ரூபாய்க்கும், அதிக பட்சமாக, 300 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. பலா பழத்துக்கு விலை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பொது பணவீக்கம் 5.43 சதவீதமாக குறைந்தது**



**புதுடில்லி** :மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் பொது பணவீக்கம், சென்ற ஜூன் மாதத்தில், 5.43 சதவீதமாக குறைந்துள்ளது.இது, முந்தைய மே மாதத்தில், 6.01 சதவீதமாக உயர்ந்து காணப்பட்டது. கடந்தாண்டு ஜூனில் பொது பணவீக்கம், 5.16 சதவீதமாக இருந்தது.

சென்ற ஜூனில், உருளைக்கிழங்கு, வெங்காயம் தவிர்த்து, இதர காய்கறிகள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் விலை சரிவடைந்துள்ளதால், பணவீக்கம் குறைந்துள்ளது.காய்கறிகள் விலை, 5.89 சதவீதம் சரிவடைந்துள்ளது. அதேசமயம், மொத்த விற்பனையில், உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றின் விலை முறையே, 42.51 சதவீதம் மற்றும் 10.70 சதவீதம் அதிகரித்துள்ளது.சர்க்கரை மற்றும் சமையல் எண்ணெய் விலை முறையே, 2.09 சதவீதம் மற்றும் 0.75 சதவீதம் குறைந்துள்ளது.

பழங்கள் (21.40 சதவீதம்), பால் (10.82 சதவீதம்), முட்டை, இறைச்சி, மீன் (10.27 சதவீதம்), அரிசி ( 10.24 சதவீதம்) ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது.முக்கிய உணவு தானியங்கள் விலை, 5.33 சதவீதம் குறைந்துள்ள நிலையில், பருப்பு வகைகள் விலை, 1.78 சதவீதம் அதிகரித்துள்ளது.மதிப்பீட்டு மாதத்தில், குளிர் பானங்கள், புகையிலை மற்றும் புகையிலை பொருட்களின் விலை, 8.64 சதவீதம் அதிகரித்துள்ளது.சென்ற ஏப்ரல் மாதம், 5.20 சதவீதமாக அறிவிக்கப்பட்ட பொது பணவீக்கம், மறு மதிப்பீட்டில், 5.55 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## கிலோ ரூ.70க்கு விற்பனை தக்காளி பழத்துக்கு தட்டுப்பாடு விலை இருமடங்காக அதிகரிப்பு

**சேலம்**: தமிழகத்தில் நிலவும் வறட்சியால், தக்காளி பழத்தின் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால், தட்டுப்பாடு ஏற்பட்டு, நாட்டுத்தக்காளி கிலோ, 70 ரூபாய்க்கும், கிராஸ் ரக தக்காளி கிலோ, 50 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தமிழகத்தில், சேலம், தர்மபுரி, திண்டுக்கல், சிவகங்கை, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், தக்காளி பழங்கள், அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், கர்நாடகாவில் இருந்து அதிகளவில், கிராஸ் ரக தக்காளி பழங்கள், விற்பனைக்கு கொண்டு வரப்படும்.

தமிழகத்தில் நிலவும் வறட்சியால், தக்காளி பழங்களின் விளைச்சல், எதிர்பார்த்த அளவு இல்லை. அதே நேரத்தில், கர்நாடகாவில் இருந்து, விற்பனைக்கு வந்து கொண்டிருந்த கிராஸ் ரக தக்காளி பழத்தின் வரத்து, பாதியாக குறைந்தது.

அதனால், தக்காளி பழத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலையில் கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் வரை, நாட்டுத் தக்காளி, 25 கிலோ கிரேடு, 900 ரூபாய்க்கு விற்றது, நேற்று, 1,800 ரூபாயாக உயர்ந்தது. இதனால், சில்லரை விலையில், கிலோ, 30 ரூபாய்க்கு விற்றது, 70 ரூபாயாக உயர்ந்துள்ளது.

நாட்டுத் தக்காளி பழத்தின் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வை அடுத்து, கிராஸ் ரக தக்காளி பழத்தின் விலையிலும், உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம், 25 கிலோ கிரேடு, 550 ரூபாய்க்கு விற்றது, நேற்று, 1,100 ரூபாயாக உயர்ந்துள்ளது. சில்லரை விலையில், கிலோ, 25 ரூபாயிலிருந்து, 50 ரூபாயாக அதிகரித்துள்ளது.

உழவர் சந்தைகளில், கடந்த வாரம் வரை, கிலோ, 24 ரூபாய்க்கு விற்ற தக்காளி பழம், படிப்படியாக உயர்வை சந்தித்து, நேற்று கிலோ, 44 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தக்காளி பழத்தின் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு, பெண்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் மத்தியில், அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சேலத்தை சேர்ந்த காய்கறி வியாபாரி குனபாலன் கூறியதாவது:

சேலத்துக்கு, தினம்தோறும், தர்மபுரி மாவட்டம் அரூரில் இருந்து, 20 மினி லாரிகளில், தக்காளி பழம் விற்பனைக்கு வந்து கொண்டிருந்தது. அதேபோல், தமிழகத்தின் பெரிய மார்க்கெட்களுக்கு தினம்தோறும், 1,300 லாரிகள் வரை, தக்காளி பழம் விற்பனைக்கு வரும். ஆனால், தற்போது வெளி மாநிலங்கள்,

மாவட்டங்களில் இருந்து தக்காளி பழத்தின் வரத்து பாதிக்கும் கீழாக குறைந்து விட்டதால், அவற்றின் விலையில், உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வு, மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு கூறினார்.

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க புதிய கட்டிடம் திறப்பு**

**அந்தியூர்**: அந்தியூர் அடுத்த, சென்னம்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட, சந்தைபேட்டையில், ஆவின் பால் சங்கத்துக்கு தனி கட்டிடம் இல்லை. இந்நிலையில், கூட்டுறவு சங்கத்துக்கு புதிய கட்டிடம் கட்ட, அந்தியூர் எம்.எல்.ஏ., ரமணீதரன், 6.16 லட்சம் ஒதுக்கீடு செய்தார். புதிய கட்டிட திறப்பு விழா நடந்தது. எம்.எல்.ஏ., ரமணீதரன் ரிப்பன் வெட்டி திறப்பு வைத்தார். முன்னதாக, சந்தைபேட்டை பால் உற்பத்தியாளர் சங்கத்தலைவர் கந்தசாமி வரவேற்றார். அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் சரவணபவா, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கிருஷ்ணராஜ், யூனியன் தலைவர் அய்யாசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சங்க உறுப்பினர்களுக்கு, 1.30 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. அந்தியூர் டவுன் பஞ்., தலைவர் மீனாட்சிசுந்தரம், துணைத்தலைவர் சிவகுமார், மாவட்ட மாணவரணி தலைவர் சண்முகானந்தம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**பவானிசாகருக்கு நீர் வரத்து அதிகரிப்பு அணையின் நீர்மட்டம் ஒரு அடி உயர்வு**

**சத்தியமங்கலம்**: பவானிசாகர் அணைக்கு, தண்ணீர் வரத்து அதிகரித்ததால், அணையின் நீர்மட்டம் நேற்று ஒரு நாளில், ஒரு அடி உயர்ந்தது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள, பவானிசாகர் அணை தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்டது. இந்த அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில், சகதிகள், 15 அடி கழித்து, மொத்த நீர்மட்ட உயரம், 105 அடியாகும். மொத்த நீர் கொள்ளளவு, 32 டி.எம்.சி., ஆகும்.

இந்த அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்கால் மூலம் திறந்துவிடும் தண்ணீரால், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த, 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது. பவானி ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீரால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த, 50 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறுகிறது.

கடந்த, இரண்டு ஆண்டாக, அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில், பருவமழை பொய்த்தது. இதனால் அணைக்கு வரும் தண்ணீர் அளவு குறைந்ததால், அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால், குடிநீர் பிரச்னை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. அணையின் நீர்மட்டம் குறைந்ததால், மீன் பிடிப்பு தொழில் மற்றும் நீர்மின் உற்பத்தி உள்ளிட்டவைகள் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக, பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில், தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால் அணையின் நீர்வள ஆதாரமான, பவானி ஆறு மற்றும் மோயாற்றில், தண்ணீர் வரத்து அதிகரித்தது. நேற்று காலை அணையின் நீர்மட்டம், 44.4 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 1,500 கனஅடி தண்ணீர் வந்தது.

மதியம் தண்ணீர் வரத்து வினாடிக்கு, 6,000 கனஅடியாக அதிகரித்தது. இதனால், அணையின் நீர்மட்டம், 46 அடியை தொடும் நிலையில் உள்ளது.

தொடர்ந்து தண்ணீர் வரந்து அதிகரித்து வருவதால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம், மேலும் உயர வாய்ப்பு உள்ளதாக, பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## காய்கறிகள் விலை உயர்வால் மக்கள் பாதிப்பு : விவசாயிகளை அரசு ஊக்குவிக்குமா?

**விழுப்புரம்**: தமிழகத்தில் காய்கறி உற்பத்தி குறைந்து, விலைவாசி உயர்வால் ஏழை, நடுத்தரக் குடும்பத்தினர் சிரமப்படுகின்றனர். காய்கறி உற்பத்தியை அதிகரிக்க மானியங்கள் நேரடியாக விவசாயிகளைச் சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள வறட்சியால், வேளாண் உற்பத்தி குறைந்து வருகிறது. அரிசி, கம்பு, கேழ்வரகு தானியப் பயிர்கள் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் தமிழகத்தில் உள்ள மார்க்கெட் கமிட்டிகள் வெறிச்சோடி காணப்படுகிறது. இதனால் அரிசி விலை கிலோவிற்கு 3 முதல் 7 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. வேளாண் உற்பத்தி முடங்கியதால், தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

தோட்டக் கலை பயிர்களான காய்கறிகள் மற்றும் கீரை வகைகளின் உற்பத்தி 50 சதவீதத்திற்கு மேல் குறைந்துள்ளது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்

டுள்ளது. ஒரு மாதமாக தமிழகத்தில் காய்கறி மற்றும் கீரை உற்பத்தி 50 சதவீதத்திற்கு மேல் குறைந்துள்ளது. போதிய பாசன வசதியின்றி, விவசாயிகள் நிலங்களைத் தரிசாக போட்டுள்ளனர். காய்கறிகளின் விலை 'ஜெட்' வேகத்தில் உயர்ந்துள்ளது.

கர்நாடக, ஆந்திரா மாநிலங்களிலிருந்து காய்கறிகளை வியாபாரிகள் வாங்கி வந்து விற்கின்றனர். லாரிகளில் ஏற்றி வந்து விற்பதால் விலை இரு மடங்கிற்கு மேல் உயர்ந்துள்ளது. இதனால் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் பாதிக்கின்றனர்.

காய்கறி உற்பத்தியைப் பெருக்க மத்திய, மாநில அரசுகள் பல மானியங்களை விவசாயிகளுக்கு வழங்க அறிவிப்புகள் மட்டுமே வெளியிடுகின்றன. அதற்கான பயன்கள் 90 சதவீதம் விவசாயிகளுக்கு வழங்குவதில்லை.

தோட்டக்கலை துறையில் சிறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க தரமான நிறுவனங்களை அரசு அனுமதிக்கவில்லை. இது போன்ற விஷயங்களில் விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்ப, நிறுவனங்களைத் தேர்வு செய்யும் உரிமைகளை வழங்க வேண்டும்.

பல இடங்களில் தோட்டக்கலை துறையினர், தரமான விதை மற்றும் பூச்சி மருந்துகளை வாங்கி, சரியான பருவத்தில் விவசாயிகளுக்கு வழங்குவது இல்லை. மாறாக தனியார் கடைகளை ஊக்குவிக்க விதைப்பு பட்டம் முடியும் நேரத்தில், விற்பனையை துவங்குகின்றனர். இதனால் விவசாயிகளுக்கு பயன் இல்லை.

காய்கறிகள் தட்டுப்பாட்டைப் போக்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும் அரசு துரித முயற்சி எடுக்க வேண்டும். இதற்கு விவசாயிகளுக்கு பணத்தை மானியமாக வழங்குவதை விட தரமான விதை, பூச்சி மருந்து, இடுபொருட்கள், சொட்டு நீர் பாசன கருவிகளை உரிய காலத்தில், விதைப்பு பட்டத்திற்கு முன்பே வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு உரிய மானியம் கிடைக்கிறதா என்பதை தனி அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்தால் மட்டுமே விவசாய பணிகள் நீடித்து நிற்கும்.

**<u>மக்காச்சோளம் வரத்து</u>**

**சின்னசேலம்**: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 50 மூட்டை மக்காசோளம், 5 மூட்டை எள் வந்தது. மக்காச் சோளம் அதிகபட்சம் ரூ.1,377க்கும்,

குறைந்தபட்சம் ரூ.1346க்கும், எள் அதிகபட்சம் ரூ.5,686க்கும், குறைந்தபட்சம் ரூ.4,820க்கும் விற் றது. கடந்த வாரம் மக்காச்சோளம் 300 மூட்டைகள் 4 லட்சத்து 2000 ரூபாய்க்கும், எள் 20 மூட்டைகள் ஒரு லட்சத்து 16,000 ரூபாய்க்கும் விற்றது.

## விழுப்புரத்தில் வரும் 18ம் தேதி விவசாயிகள் குறைகேட்பு

**விழுப்புரம்**: விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம், வரும் 18ம் தேதி நடக்கிறது. விழுப்புரம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், வரும் 18ம் தேதி காலை 11:00 மணிக்கு விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்டம் நடக் கிறது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்கி, விவசாயிகளின் குறைகளை கேட்டறிகிறார். இதில், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் மற் றும் விவசாயிகள் கலந்து கொண்டு, கோரிக்கைகளை மனுவாக கொடுத்து பயன்பெறலாம் என கலெக்டர் அ<லு வலக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது

## சில்லுன்னு ஒரு மழை! அணைகளுக்கு அதிகரிக்கும் நீர் வரத்து.. பொள்ளாச்சி, உடுமலை விவசாயிகள் மகிழ்ச்சி

**பொள்ளாச்சி**, உடுமலையில், நிலவி வந்த வறண்ட வானிலை மாறி, சில்லென்ற காற்றுடன், பெய்யும் துாறல் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பி.ஏ.பி., தொகுப்பு அணைகள் மற்றும் அமராவதிக்கு நீர் வரத்து அதிகரித்து, விவசாய சாகுபடி மேற்கொள்ள ஊக்கமளித்துள்ளது.

உடுமலைப்பகுதியில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை அடிப்படையாகக்கொண்டு, பல ஆயிரம் ஏக்கரில், விவசாய சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. சிறுதானியங்கள், தென்னை உட்பட சாகுபடிகளுக்கு ஜீவாதாரமாக இருந்த பருவமழை, கடந்த இரண்டாண்டுகளாக போதுமான அளவு பெய்யவில்லை. குளிர் காற்று, மிதமான வெப்பத்திற்கு பெயர் பெற்ற, உடுமலை சீதோஷ்ண நிலை, மழையின் கருணை குறைந்ததால், வெயில் அதிகரித்து, மக்களையும், விவசாயிகளையும் வாட்டியது. இந்தாண்டும், தென்மேற்கு பருவமழை குறித்த நேரத்தில் துவங்கவில்லை.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக, உடுமலை பகுதியில், வெப்பத்திற்கு விடை கொடுத்து, குளிர்ந்த காற்றுடன், துாறல் மழை பெய்து வருகிறது. மேற்குத்தொடர்ச்சி மலையிலும், மழை துவங்கியுள்ளதால், அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலையில் உருவாகும், பாம்பாறு,

தேனாறு, கூட்டாறு உட்பட ஆறுகளை நீர்ப்பிடிப்பு பகுதியாக கொண்டுள்ள அமராவதி அணைக்கு நாள்தோறும் நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி, அணைக்கு, வினாடிக்கு, 2,411 கன அடி நீர் வரத்து உள்ளது. அணையின் நீர் மட்டம் ஒரே நாளில், 6 அடி உயர்ந்து, 39.43 அடியாக உள்ளது.

அமராவதி பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்தில், கரும்பு சாகுபடியில், நடவுப்பணிகளுக்காக காத்திருந்த விவசாயிகளுக்கு அணையின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது அதிக நம்பிக்கை யை ஏற்படுத்தியுள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் மழை பெய்வதால், மாணவர்களும், பொதுமக்களும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். மழை தொடர்ந்து பல நாட்களுக்கு நீடித்தால் மட்டுமே, தென்னை உட்பட சாகுபடிகளுக்கு உதவியாக இருப்பதுடன், நிலத்தடி நீர் மட்டத்திற்கும் உதவும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

பொள்ளாச்சி: பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், விவசாயம்
முக்கியத்தொழிலாக உள்ளது. இப்பகுதிகளில், தென்னை மற்றும் மா உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மற்ற பயிர்களை விட தென்னை சாகுபடி அதிகளவு உள்ளது. போதுமான நீர் வசதி கிடைத்து வந்ததால், சாகுபடி செய்யப்படும் பயிர்கள் மற்ற பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.இப்பகுதியில், விவசாயம் முக்கிய தொழிலாக இருந்ததால், பல்வேறு பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டு வந்ததால் பசுமை நகரம் என பொள்ளாச்சி அழைக்கப்பட்டு வந்தது. முற்றிலும் விவசாயத்தையே முக்கிய தொழிலாக கொண்ட இப்பகுதி மக்கள், அதனை நம்பியே பிழைப்பை நடத்தி வருகின்றனர்.

போதிய மழை, பாசன நீர் கிடைத்ததால், போதிய லாபமும் பெற்று வாழ்க்கையினை நகர்த்தி வந்தனர். இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக மழை பொய்த்தது; பாசனத்திற்கு நீர் கிடைக்காதது போன்ற காரணங்களினால், விவசாயம் பாதிக்கப்பட்டு வந்தது. போதிய நீர் கிடைக்காமல், விவசாய பயிர்கள் காய்ந்து கருகின; மேலும், தென்னை மரங்களும் தண்ணீரின்றி காய்ந்தது. இதனால், தேங்காய் உள்ளிட்டவையின் உற்பத்தி குறைந்தது. தேவை அதிகரித்தும், வரத்து இல்லாததால், விலையும் உயர்ந்து காணப்படுகிறது. மேலும், வழக்கத்திற்கு மாறாக இந்தாண்டு சுட்டெரிக்கும் கோடை வெயிலில், சென்று வர முடியாமல் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். நிலத்தடி நீர்மட்டமும் அதலபாதாளத்திற்கு சென்றதால், குடிநீர் பிரச்னையும் ஏற்பட்டது. கோடை காலம்

முடிந்ததும், பருவமழை பெய்யுமா என எதிர்பார்ப்புடன் விவசாயிகள் காத்திருந்தனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக பருவமழை பெய்து வருவதால், விவசாயிகள் மற்றும் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மழை நிலவரம் (மி.மீ.,): சோலையாறு - 65, பரம்பிக்குளம் - 13.0, ஆழியாறு - 5.2, திருமூர்த்தி - 6, அப்பர் நீராறு - 135, லோயர் நீராறு-70, வால்பாறை - 28, வேட்டைக்காரன்புதுார் - 15.6, பொள்ளாச்சி - 9, மணக்கடவு - 4.2, நல்லாறு - 10, பெருவாரிப்பள்ளம் - 11, துாணக்கடவு - 7, நவமலை - 7.5, காடம்பாறை - 4, சர்க்கார்பதி - 21.

புத்துயிர் பெறும் சுற்றுலா தலங்கள் : மேற்குத்தொடர்ச்சி மலையில், பெய்து வரும் மழையால், பரிதாப நிலையில் காட்சியளித்த, சிற்றாறுகள் மற்றும் அருவிகளுக்கு நீர் வரத்து கிடைத்துள்ளது. உடுமலை-மறையூர் வழித்தடத்திலுள்ள துாவானம், கருமுட்டி, திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவிக்கு நீர் வரத்து அதிகரித்து, தண்ணீர் கொட்டி வருகிறது.

-நமது நிருபர் குழு-

**அறுவடைக்கு தயாரான வயல்கள்**

**மானாமதுரை** : மானாமதுரை வட்டாரத்தில் கோடை விவசாயத்தில் பயிரிடப்பட்டிருந்த நெல் அறுவடைக்கு தயாராக உள்ளது. மானாமதுரை கட்டிக்குளம் ,கொம்புக்காரனேந்தல், பெரும்பச்சேரி,மேட்டு மடை உள்ளிட்ட கிராமங்களில் 150 ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது.கோடை மழை இல்லாத நிலையில் பெரும்பாலான விவசாயிகள் பம்ப் செட் மூலம் விவசாய பணிகளை மேற்கொண்டனர். கடந்தாண்டு குறுகிய காலப்பயிரான கோ 43 நெல் ரகங்களை பயிரிட்டனர். போதிய விளைச்சல் இன்றி பெரும் நஷ்டத்தை சந்தித்தனர். தற்போது என்.ஆர்.எல்.,என்ற ரகத்தை பயிரிட்டுள்ளனர். நான்கு மாத பயிரான இந்த ரகம் தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளது. விவசாயி சுந்தரராஜ் கூறுகையில்: ஏக்கருக்கு சாதாரணமாக 20 முதல் 30ஆயிரம் வரை செலவாகும். தற்போது மழையில்லாததால் மோட்டார் வைத்திருக்கும் விவசாயிகளிடம் வாடகைக்கு வாங்கி தண்ணீர் பாய்ச்சியுள்ளோம். எனது வயல் மோட்டாரிலிருந்து 600 மீட்டர் துாரத்தில் உள்ளது. பிளாஸ்டிக் பைப் வாங்கி தண்ணீர் பாய்ச்சினேன், என்றார். மானாமதுரையில் மற்ற பகுதிகள் எல்லாம்

வறட்சியால் வறண்டு கிடக்க மேட்டுமடை,கட்டிகுளம் பகுதி மட்டும் பச்சைப்பசேல் என பார்ப்பவர் கண்களுக்கு குளிர்ச்சியாக காணப்படுகிறது. ஒரு சில நாட்களில் அறுவடை தொடங்கி விடும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**நெல், தானியம், பயறு வகை உற்பத்தி அதிகரிப்பு! நிலப்பரப்பு குறைந்தாலும் விளைச்சல் குறையவில்லை**

**திருவள்ளூர்** : திருவள்ளூர் மாவட்டத்தில், ஆண்டுக்கு ஆண்டு, பயிரிடும் நிலப்பரப்பு குறைந்தாலும், விளைச்சல் குறையாமல், அதிகரித்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. மொத்த மக்கள் தொகையில், 47 சதவீதம் பேர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். நெல், கரும்பு, சோளம், கம்பு, ராகி, பாசிப்பயறு மற்றும் வேர்க்கடலை போன்றவை அதிகளவில் பயிரிடப்படுகின்றன.

விவசாய தொழில் குறைவு... : சில ஆண்டுகளுக்கு முன், 4,42,075 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடந்து வந்தது. தற்போது, 2.50 லட்சம் முதல் 2.80 லட்சம் ஏக்கர் வரை தான், பயிரிடப்பட்டு வருகிறது.விளைநிலங்களை விற்பனை செய்தல், ஆட்கள் பற்றாக்குறை போன்றவை, விளைநிலங்கள் குறைதலுக்கு காரணம். இருப்பினும், விவசாய உற்பத்தி அதிகரித்து வருகிறது.கடந்த, 2010-11ம் ஆண்டு, 2,46,012 ஏக்கர் பரப்பளவில் நடந்த விவசாயம், 2011-12ல் 2,23,875 ஏக்கராகவும், 2012--13ல், 2,25,02௩ ஆகவும், கடந்த ஆண்டு (2014--15), சற்று உயர்ந்து, 2,65,601 ஏக்கரில் பயிரிடப்பட்டது. ஆக அதே சமயம், உற்பத்தி சதவீதம் மட்டும் குறையாமல், அதிகரித்து வருகிறது.

காரணம் என்ன? : இதுகுறித்து, வேளாண் அலுவலர் ஒருவர் கூறுகையில், "மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க, ஆண்டுதோறும் இலக்கு நிர்ணயித்து, அதன்படி விவசாயிகளுக்குத் தேவையான விதை, உரம் போன்றவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. மேலும், கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு, சிக்கனமாக பயிருக்கு தண்ணீர் விடும், சொட்டு நீர் பாசனம், ஸ்பிரிங்ளர் போன்ற திட்டங்கள், விவசாயிகளுக்கு, மானிய விலையில் அளிக்கப்படுகிறது. இதனால், விவசாயிகள் ஆர்வமாக பயிரிடுவதால், விளைநிலங்கள் குறைந்தாலும், உற்பத்தி சதவீதம் மட்டும் குறையவில்லை," என்றார்.

\கடந்த நான்கு ஆண்டுகளில் பயிரிடப்பட்ட விவரம்

2010-11 2011-12 2012-13 2013-14

பயிர் வகைகள் - பயிர் ஏரியா ஏக்கரில் - விளைச்சல் மெட்ரிக் டன் - பயிரிட்ட ஏரியா ஏக்கரில் - விளைச்சல் மெட்ரிக் டன் - பயிரிட்ட ஏரியா ஏக்கரில் - விளைச்சல் மெட்ரிக் டன் - பயிரிட்ட ஏரியா ஏக்கரில் - விளைச்சல் மெட்ரிக் டன்

நெல் 2,14,809 2,86,285 1,90,575 3,10,341 2,00,122 3,22,187 2,29,980 42,589

தானிய
வகைகள் 2,614 1,597 1,805 1,239 2,312 2,198 6,060 10,297
பயறு வகை

பயிர்கள் 28,589 5,415 31,495 6,373 22,589 5,272 29,561 10,297

**அதிகரிப்பு! : கொல்லிமலையில் பலா விளைச்சல்... : கூடுதல் விலையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

**நாமக்கல்**: கொல்லிமலையில், பலா விளைச்சல் அதிகரித்துள்ளதுடன், விலையும் கூடுதலாக கிடைத்து வருவதால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில், சுற்றுலாத்தலமாக கொல்லிமலை உள்ளது. இம்மலையில், ஏராளமான அபூர்வ மூலிகை செடிகள் நிறைந்துள்ளது. கொல்லிமலையை சதுரகிரி என்றும் அழைப்பர். இங்கு, அகத்தியர், திருமூலர், போகர், கரூவூரார், காலிங்கநாதர், புலிப்பாளி, சட்டநாதர் உள்ளிட்ட 18 சித்தர்கள் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

அதற்கு சான்றாக ஏராளமான குகைகள் இங்கு அமைந்துள்ளது. மேலும், ராஜராஜசோழனின் மாமியார், செம்பியன்மாதேவி, அறப்பளீஸ்வரர் கோவிலுக்கு, தானம் வழங்கியதாக, வரலாற்று சான்றுகள் உள்ளன. சங்க இலக்கியமான குறுந்தொகை, புறநானூறு, கலித்தொகையிலும், கொல்லிமலை இடம் பெற்றுள்ளது.

கொல்லிமலை, கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி ஆண்ட நாடாகவும் திகழ்கிறது. இங்கு, ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி, பிரசித்தி பெற்ற அறப்பளீஸ்வரர் கோவில் மற்றும் கொல்லிப்பாவை என்று அழைக்கப்படும், எட்டுக்கை அம்மன் கோவிலும் அமைந்துள்ளது. இங்கு, மா, பலா, கொய்யா, அன்னாசி, மலைவாழை போன்ற பழவகைகள் சாகுபடி செய்யப்படுகிறது. பலா

மரம், 500 ஏக்கருக்கும் அதிகமான அளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பலா சீஸன், ஒவ்வொரு ஆண்டும் வைகாசி துவங்கி, ஆடி மாதம் வரை மூன்று மாதங்கள் நீடிக்கும்.

இங்கு விளையும் பலாப்பழம், நாமக்கல், சேலம், ஆத்தூர், தம்மம்பட்டி, திருச்சி, கரூர், திண்டுக்கல் போன்ற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மழை காலங்களில் பூச்சி தாக்குதல் காரணமாக, உற்பத்தி குறைந்துவிடும். வறட்சி காலங்களில் மட்டுமே பலா அதிக அளவு உற்பத்தியாகும்.

தற்போது வறட்சி காரணமாக, கடந்தாண்டை காட்டிலும், பலா உற்பத்தி அதிகரித்துள்ளது. அறுவடை செய்யப்படும் பலா பழம், கொல்லிமலையில் உள்ள சோளக்காடு வாரச்சந்தையில் செவ்வாய், புதன், வெள்ளி, சனிக்கிழமையும், செங்கரை, கெம்பளம், மையங்கரையில் செவ்வாய், வெள்ளிக்கிழமையும் சந்தை கூடுகிறது.

இங்கு, ஒரு பலா குறைந்த விலையாக, 50 ரூபாய்க்கும், அதிக பட்சமாக, 300 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. பலா பழத்துக்கு விலை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## நெல் வயலில் களையை தடுக்க விவசாய மாணவிகள் விளக்கம்

**கம்பம்**: நெல் வயல்களில் களை வளர்வதை தடுக்கவும், நைட்ரஜன் சத்து நிலை நிறுத்தப்படுவதற்கும் பயன்படுத்த வேண்டிய தொழில்நுட்பஉஊ குறித்து மதுரை விவசாய கல்லூரி மாணவிகள் விளக்கம் அளித்தனர்.

மதுரை விவசாய கல்லூரிமாணவிகள் சூரியா, தமிழ்யாழினி, வசந்தா, வேல்மணி நிர்மலா, வெண்ணிலா, விஜயா, செண்பகராணி, ஆஷிகா பீமா ஆகியோர் உத்தமபாளையம் வட்டாரத்தில் தங்கி, கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றனர். விவசாயிகள் பின்பற்றும் நடைமுறைகக்ஙி தெரிந்து கொண்டு, அவர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை விளக்கினர். ராயப்பன்பட்டியில் ஆரோக்கியசாமி என்பவரது வயலில் களை வளர்வதை தடுக்கவும், நைட்ரஜன் சத்துக்களை நிலை நிறுத்தவும் அசோல்லா என்ற மருந்து இடுதல் பற்றியும், இடும் முறைகள், அதன் பயன்களையும் விளக்கினர். மேலும் கம்பம் உழவர் சந்தையில் காய்கறி விலை நிர்ணயம் செய்யும் முறை, விவசாயிகள் காய்கறிகளை விற்பனை செய்யும் முறை மற்றும் விவசாயிகளுக்கு உள்ள

மார்க்கெட்டிங் பிரச்னைகள் உள்ளிட்ட பல விஷயங்களை உழவர் சந்தையில் நேரடியாக தெரிந்து கொண்டனர்.

## 900 அடிக்கு போர்வெல் அமைத்தும் பலனில்லை; விவசாயிகளின் கடைசி முயற்சியும் தோல்வி

**தேவதானப்பட்டி** : தேனி மாவட்டம் பெரியகுளம் தாலுகாவில் வாழை உள்ளிட்ட விவசாயத்தை காப்பாற்ற விவசாயிகளின் கடைசி முயற்சியான "போர்வெல்' அமைக்கும் பணியும் தோல்வியில் முடிந்தது. பல இடங்களில் 900 அடிவரை போர்வெல் அமைத்தும் தண்ணீர் கிடைக்கவில்லை.

பெரியகுளம் தாலுகாவில் தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, தாமரைக்குளம், டி.கள்ளிப்பட்டி, வடுகபட்டி ஆகிய 5 பேரூராட்சிகளும் ஜி.கல்லுப்பட்டி, ஜெயமங்கலம், குள்ளப்புரம், சருத்துபட்டி, கீழவடகரை, லட்சுமிபுரம், வடபுதுப்பட்டி உட்பட 17 கிராம ஊராட்சிகள் உள்ளன. 100க்கும் மேற்பட்ட உட்கடை கிராமங்கள் உள்ளன. கிராமங்களில் விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளது. மஞ்சளாறு, வராகநதி,சோத்துப்பாறை ஆகிய நீர்நிலைகளில் கிடைக்கும் நீரை கண்மாய், குளங்களில் தேக்கி நெல், கரும்பு, வாழை, தென்னை, மா, மற்றும் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி செய்து வந்தனர். தவிர மானாவாரி சாகுபடியும் நடந்து வந்தது. கடந்த மூன்றாண்டுகளாக தொடர்ந்து வறட்சி நிலவுவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக பலன் கொடுத்த தென்னை மரங்கள் காய்ந்து வருகின்றன. மழையை எதிர்பார்த்து வாழை, கரும்பு சாகுபடி செய்த விவசாயிகளுக்கு ஏமாற்றம் மிஞ்சியது. விவசாய கிணறுகள் வறண்டதால் சாகுபடி செய்த பயிர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற கட்டாயத்திற்கு விவசாயிகள் ஆளாகி உள்ளனர். * கிணறுவெட்டும் விவசாயிகள்: மஞ்சளாறு அணை, சோத்துப்பாறை அணை மற்றும் வராகநதியின் கரையோரங்களில் உள்ள கிணறுகள் ஆழம் குறைவாக உள்ளன. தற்போது கிணறுகளை ஆழப்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சில விவசாயிகள் ஆழ்துளை போர்வெல் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பெரியகுளம் தாலுகா பகுதியில் பரவலாக அனைத்து கிராமங்களிலும் 700 முதல் 900 அடிக்கும் கீழே நிலத்தடி நீர்மட்டம் சரிந்தது. குள்ளப்புரம், பொம்மிநாயக்கன்பட்டி, ஜெயமங்கலம், மேல்மங்கலம் கிராமங்களில் தென்னை விவசாயிகள் அதிமாக போர்வெல் அமைத்து வருகின்றனர். பல

இடங்களில் 900 அடி வரை வெறும் தூசிதான் பறக்கிறது. இதை பார்ப்பதற்கு காட்டுத் தீயால் ஏற்பட்ட புகை மண்டலம் போல் காட்சியளிக்கிறது. இதனால் நஷ்டத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டு விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

தினமணி

**கரும்பு விவசாயிகளின் நிலுவைத்தொகை ரூ.527 கோடி 15 நாள்களில் வழங்கப்படும்: தமிழக அரசு**

**சென்னை**



தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய பாக்கித் தொகையான ரூ.527 கோடியை 15 நாள்களுக்குள் அளிக்க ஆலைகள் ஒப்புக் கொண்டிருப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தொழில் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி கொறடா வி.சி.சந்திரகுமார் பேசியபோது நடைபெற்ற விவாதம்:

வி.சி.சந்திரகுமார் (தேமுதிக): கரூரில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில் ஆயிரத்து 500 ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வாக்குறுதிகள் அளிக்கப்பட்டும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஈரோட்டில் சாயக் கழிவுகள் பிரச்னை தொடர்பாக, ஆயிரத்து 243 ஆலைகள்

மூடப்பட்டுள்ளன. 20 சதவீத ஆலைகளில் மட்டுமே இப்போது உற்பத்தி நடைபெறுகிறது. கரூர், சேலம், கோவை மாவட்டங்களிலும் கழிவு நீரை சுத்திகரிப்பதற்கான பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம்: பனியன் உற்பத்தியில் திருப்பூர் மாவட்டம் முதலிடம் வகித்த நிலையில், கடந்த திமுக ஆட்சியில் ஆலைகள் மூடப்பட்டன.

சாயக் கழிவுகள் பிரச்னை தொடர்பாக ஆலைகள் மூடப்பட்ட நிலையில், அதிமுக ஆட்சி பொறுப்பேற்றதும் பல்வேறு ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு ரூ.180 கோடியில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. இப்போது அங்கு உற்பத்தி தொடங்கப்பட்டு பனியன் உற்பத்தியில் ஆசிய கண்டத்தில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

சந்திரகுமார்: தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய பாக்கித் தொகை ரூ.844 கோடி அளவுக்கு உள்ளது. அந்தத் தொகையை உடனடியாக வழங்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழில் துறை அமைச்சர் தங்கமணி: தனியார் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகை ரூ.527 கோடி. அந்தத் தொகையை 15 நாள்களில் கொடுத்து விடுவதாக ஆலைகள் உறுதி அளித்துள்ளனர் என்றார்.

**<u>தமிழகத்தில் இன்றும் மழைக்கு வாய்ப்பு</u>**

**சென்னை**

தமிழகம் மற்றும் புதுவையில் செவ்வாய்க்கிழமை (ஜூலை 15) மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:

வங்கக் கடலில் ஒடிஸா மற்றும் மேற்கு வங்க மாநிலங்களின் கடற்பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை அதே நிலையில் உள்ளது.

இதனால் ஏற்பட்டுள்ள வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் மழை பெய்யும்.

இதுபோல் தென்மேற்கு பருவமழையின் தாக்கமாக நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் கனமழை பெய்யும்.

மழை பதிவு: திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் கோவை மாவட்டம் சின்னக்கல்லாறில் 130 மி.மீ. மழை பெய்துள்ளது. நடுவட்டம், கூடலூர், தேவலாவில் 90 மி.மீ. மழையும், வால்பாறையில் 70 மி.மீ. மழையும் பெய்துள்ளது. ஊட்டி, பொள்ளாச்சி, கேட்டி ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை: கர்நாடகத்தில் வேகமாக நிரம்பும் அணைகள்**

**பெங்களூரு,**



பலத்த மழை பெய்து வருவதால் சிக்கமகளூரில் திங்கள்கிழமை கரைபுரண்டோடும் வெள்ளநீர்.

காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால், கர்நாடகத்தில் உள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

கர்நாடகத்தில் கடந்த சில நாள்களாக கடலோர கர்நாடகம், தென் கர்நாடகத்தின் உள்பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

குடகு, சிக்கமகளூர், ஹாசன் , தென் கன்னடம், ஷிமோகா, வட கன்னடம், உடுப்பி ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருவதால், காவிரி உள்ளிட்ட நதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவ மழை தீவிரமடைந்துள்ள நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் ஆகும்பேவில் அதிகபட்சமாக 230 மிமீ பதிவானது. கம்மரடியில் 200

மிமீ, நில்குந்தில் 190 மிமீ, கொர்சொப்பாவில் 170 மிமீ, தாலகுப்பவில் 160 மிமீ, தீர்த்தஹள்ளி, சிருங்கேரி, கொப்பாவில் தலா 150 மிமீ, கோடா, கோகர்ணாவில் தலா 130 மிமீ மழை பதிவாகியுள்ளது.

வெள்ள அபாய முன்னெச்சரிக்கை: குடகு மாவட்டத்தில் தொடர்ந்து மழை பொழிந்து வருவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லும் பணியில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளான குடகு, ஹாசன், சிக்கமகளூர் மாவட்டங்களில் வழக்கத்தைப் போல பலத்த மழை பெய்து வருவதால், காவிரி நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. மேலும், பெரும்பாலான ஊர்களுக்கு சாலைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அணைகள் நிரம்பி வருகின்றன: தொடர்ந்து மழை பெய்து வருவதால், காவிரி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கிருஷ்ணராஜசாகர், ஹாரங்கி, ஹேமாவதி, கபினி ஆகிய அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 84.90 அடியாக உயர்ந்தது. அணையின் உயரம் 124.80 அடியாகும். அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 9,971 கன அடியாகவும், நீர்வெளியேற்றம் விநாடிக்கு 369 கன அடியாகவும் இருந்தது.

ஹாரங்கி அணையின் நீர்மட்டம் (கடல் மட்டத்திலிருந்து) 2834.71 அடியாக (மொத்த உயரம் 2859 அடி) உயர்ந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 2,841 கன அடியாக இருந்தது. அதேபோல, ஹேமாவதி அணையின் நீர்மட்டமும் 2877 அடியாக (மொத்த உயரம் 2922 அடி) உயர்ந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 3,695 கன அடியாகவும், நீர் வெளியேற்றம் விநாடிக்கு 250 கன அடியாகவும் இருந்தது.

கேரள மாநிலம், வயநாடு பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால், கபினி அணையின் நீர்மட்டம் 2276 (கடல் மட்ட அளவு) அடியாக உயர்ந்துள்ளது. அணையின் மொத்த உயரம் 2,284(கடல் மட்ட அளவு)..

வானிலை முன்னறிவிப்பு: அடுத்த 72 மணி நேரத்தில் மாநிலத்தில் பரவலாக தென்மேற்குப் பருவ மழை தீவிரமடைந்து

மிதமானது முதல் மிக பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**<u>பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு மானியத்தில் இடுபொருள்கள்</u>**

**விருதுநகர்**

விருதுநகர் மாவட்டத்தில் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மாநில தீவன அபிவிருந்தி திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்பு துறை மூலம் விவசாயிகளுக்கு விதை, இடுபொருள்கள் மானியத்தில் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து ஆட்சியர் டி.என். ஹரிஹரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

இம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைக்கவும், விவசாயிகள் பசுந்தீவனம் பயிரிடுவதை ஊக்கப்படுத்தவும் கால்நடை பராமரிப்பு துறை மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில், நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் அதிக மகசூல் பெறும் வகையில் கோ-3, கோ-4 ஆகிய பசுந்தீவனம் 300 ஏக்கரில் பயிரிடுவதற்கு விதைகள், இடுபொருள்கள் மானியத்தில் வழங்கப்படும். அதேபோல், மானாவாரி நிலங்களில் சோளம், தட்டைப்பயறு 1600 ஏக்கரில் பயிரிட விதை, இடுபொருள்கள் ஆகியவை முழு மானியமாக அளிக்கப்படும். மேலும், 200 ஏக்கரில் பயிரிட அகத்தி விதைகள் 100 சதவீத மானியத்திலும், நீர் சேமிப்பு உபகரணங்கள், நீர் தெளிப்பான் ஆகியவைகள் 75 சதவீத மானியத்திலும் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த சிறுகுறு விவசாயிகள் மற்றும் இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் கறவை பசுக்கள் மற்றும் செம்மறி, வெள்ளாடுகள் பெற்ற பயனாளிகள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். எனவே இத்திட்டங்களில் பயன் பெற விரும்பும் பயனாளிகள் தங்கள் கிராம பகுதிகளுக்கு உள்பட்ட கால்நடை மருந்தகம் மற்றும் மருத்துவமனைகளில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து அளிக்க வேண்டும். மேலும் விவரங்களை கால்நடை உதவி மருத்துவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையில் மாற்றமில்லை</u>**

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக்கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 83 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் திங்கள்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.20, சென்னையில் ரூ. 3.76.

**<u>ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலக்கடலை வரத்து குறைவு</u>**

**அவிநாசி,**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் வரத்துக் குறைந்து ஒரு லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது .

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், நிலக்கடலை வரத்து குறைந்து 50 மூட்டைகள் மட்டுமே வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 3,600 முதல் ரூ. 3,800 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,200 முதல் ரூ. 3,550 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 6 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 10 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

**<u>தேங்காய், கொப்பரை ஏலம்</u>**

**மொடக்குறிச்சி,**

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை ஏலம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

293 மூட்டைகளில் 8 டன் எடையுள்ள கொப்பரையை விவசாயிகள் கொண்டு வந்தனர்.

இதில், முதல் தர கொப்பரை அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.97.35, குறைந்தபட்சமாக ரூ.92.60-க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.93.15-க்கும், குறைந்தபட்சமாக ரூ.70.70-க்கும் என மொத்தம் ரூ.7 லட்சத்து 54 ஆயிரத்து 220-க்கு ஏலம் நடைபெற்றது.

இதேபோல், 14 டன் எடையுள்ள 39 ஆயிரத்து 968 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்ச விலையாக டன் ரூ.28 ஆயிரத்து 250-க்கும், குறைந்த பட்சமாக ரூ.19 ஆயிரத்து 929-க்கும் ஏலம் போனது.

**<u>சத்தியில் வேளாண் பல்கலை.மாணவியருக்கு களப் பயிறசி</u>**

**சத்தியமங்கலம்**

கோவை வேளாண் பல்கலைக்கழக மாணவியருக்கு பவானிசாகர் வட்டார தோட்டங்களில் களப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஊரக வேளாண் பயிற்சி மற்றும் கிராம தங்கல் திட்டத்தின்கீழ், கோவை வேளாண் பல்கலைக்கழக மாணவிகள், சத்தி அரியப்பம்பாளையத்தில் தங்கியிருந்து பயிற்சி பெற்று வருகின்றனர். வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண் விற்பனைத் துறை போன்ற வேளாண்மை சார்ந்த அனைத்து துறைகளின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து பயிற்சி பெற்றனர். விவசாயிகளை நேரடியாகத் தொடர்பு கொண்டு நவீனத் தொழில் நுட்பங்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மேலும், பயிர்ச் சாகுபடி குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தனர்.

சிவியார்பாளையத்தில் டானிக்கை வேர் மூலமாக தென்னைக்குச் செலுத்தும் முறை குறித்து

விவசாயிகளுக்கு மாணவிகள் விளக்கினர்.

**<u>இயற்கை விவசாயக் கருத்தரங்கம்</u>**

**கோபி,**

கோபியில் ஜெயம் பிராணி நல அறக்கட்டளை சார்பில், வறட்சியிலும் லாபகரமான இயற்கை விவசாயம் என்ற தலைப்பில் கருத்தரங்கம், கே.வி. கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

உலக மகளிர் உரிமைக் கழக உறுப்பினர் ஜி.ஜெயலட்சுமி வரவேற்றார். கோபி மைராடா வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.அழகேசன் கருத்தரங்கை துவக்கி வைத்தார்.

சிறு தானியத்தின் உபயோகம், விளைவிக்கும் முறை குறித்து பேராசிரியர் ஏ.நிர்மலா குமாரி, கால்நடை வளர்ப்பு லாபகரமான தொழில் எனும் தலைப்பில் திருமானூர், இயற்கை வாழ்வியல் இயக்கத் தலைவர் காசி பிச்சை, கால்நடைக் கழிவுகளில் மதிப்பூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு முறைகள் குறித்து நாக்பூர் கோ.விக்ஞான், அணு சந்தாதன் கேந்திரா தமிழக அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், இயற்கை விவசாயத்தில் ஊடகங்களின் பங்கு என்பது குறித்து ஆர்.விஜயகுமார், இயற்கை விவசாயத்தில் அதிகப்படியான மகசூல் எடுப்பது குறித்து அன்னூர் சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

கால்நடைக் கழிவிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்களான கொசுவர்த்தி, ஊதுபத்தி, குளியல் சோப் உள்ளிட்ட 120-க்கும் அதிகமான பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்வதால் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

**<u>பரமத்தி வேலூர்ஏலச் சந்தையில் பூக்கள் விலை உயர்வு</u>**

**பரமத்தி வேலூர்**

பரமத்தி வேலூர் பூ ஏலச் சந்தையில் பூக்களின் வரத்து குறைந்ததால், திங்கள்கிழமை விலை உயர்ந்தது.

பரமத்தி வேலூர் வட்டத்தில், அய்யம்பாளையம், கொளக்காட்டுப்புதூர், பரமத்தி, செங்கப்பள்ளி, கரசப்பாளையம், கரூர் மாவட்டம், சேமங்கி, வேலாயுதம்பாளையம்

உள்ளிட்ட பகுதிகளில் குண்டுமல்லி, சாமந்தி, சம்மங்கி, அரளி உள்ளிட்ட பூக்கள் அதிக அளவு விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். இங்கு விலையும் பூக்களை விவசாயிகள் பரமத்தி வேலூரில் நடைபெறும் தினசரி பூ ஏல சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

கடந்த வாரம் நடைபெற்ற நடைபெற்ற ஏலத்தில் குண்டு மல்லி கிலோ ரூ.180, சென்டு மல்லி ரூ.50, சம்மங்கி ரூ.120, அரளி ரூ.70-க்கு ஏலம் போனது. திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் குண்டு மல்லி கிலோ ரூ.270, சென்டு மல்லி ரூ.80, சம்மங்கி ரூ.80, அரளி ரூ.120-க்கு ஏலம் போனது. பூக்களின் வரத்து குறைந்துள்ளதால், விலை உயர்ந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டை அருகே தோப்புப்பட்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முகாமில் திருந்திய நெல் சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு திருச்சி வேளாண் கல்லூரி மாணவர்கள் பயிற்சி அளித்தனர்.

புதுகை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமுக்கு திட்ட அலுவலர் ரா. ராஜ்குமார் தலைமை வகித்தார். இதில், திருச்சி வேளாண் கல்லூரி மாணவர்கள் திருந்திய நெல் சாகுபடி முறைகள் குறித்து தொழில்நுட்பப் பயிற்சி அளித்தனர்.

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்கள் 11 பேர் கொண்ட குழுவினர் புதுக்கோட்டை வட்டாரத்தில் நடைபெற்று வரும் பயிர் சாகுபடி குறித்து களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒருபகுதியாக இந்தப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

## விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள்

**பேராவூரணி,**

பேராவூரணி வட்டாரத்தில் குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களை வேளாண் துணை இயக்குநர் சீனிவாசன் அண்மையில் வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடைமடை பகுதியான பேராவூரணி வட்டாரத்தில் 100 ஹெக்டேருக்கு மேலாக குறுவை சாகுபடிப் பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழக அரசின் சிறப்பு திட்டமான குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு 100% மானியத்தில் இடுபொருள்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. பேராவூரணி வட்டாரத்துக்கு உயிர் உரங்கள் 200 ஏக்கர் பரப்பிற்கும், நெல் நுண்ணூட்டம் 140 ஏக்கர் பரப்பிற்கும், ஜிங்சல்பேட் 200 ஏக்கர் பரப்பிற்கும், திரவ உயிர் உரங்கள் 200 ஏக்கர் பரப்பிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இடுபொருள்களை பெற விரும்பும் விவசாயிகள் ஒருங்கிணைந்த அடையாள அட்டை நகல், சிட்டா அடங்கல் ஆகியவற்றை தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலரிடம் வழங்கிப் பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் 1 ஏக்கர் பரப்பில் சமுதாய நாற்றங்கால் அமைத்து திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவுப்பணி மேற்கொள்ள, இதர விவசாயிகளுக்கு சமுதாய நாற்று வழங்குவதற்கு ரூ. 25 ஆயிரம் மானியம் வழங்கப்படவுள்ளது. சமுதாய நாற்றங்கால் அமைக்க விரும்பும் விவசாயிகள் தங்கள் தொகுதி வேளாண் அலுவலர்களை சந்தித்து உரிய விளக்கங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலும் குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் தொகுதி வேளாண் உதவி அலுவலர்களை அணுகி தங்கள் பெயர்களை பதிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் தேவையான இடுபொருள்களை பெற்றுக் கொள்ளலாம் என பேராவூரணி கோட்ட வேளாண் உதவி இயக்குநர் எஸ். ஈஸ்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>நாகர்கோவிலுக்கு 1,400 டன் அரிசி அனுப்பிவைப்பு</u>**

**நீடாமங்கலம்,**

பொது விநியோகத் திட்டத்துக்காக நீடாமங்கலத்திலிருந்து நாகர்கோவிலுக்கு 1,400 டன் பொதுரக அரிசி (சி.ஆர்.1009) திங்கள்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது. சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை மற்றும் பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கிலிருந்து 134 லாரிகளில் கொண்டு வரப்பட்ட அரிசி மூட்டைகள் நீடாமங்கலத்திலிருந்து சரக்கு ரயிலின் 28 பெட்டிகளில் ஏற்றப்பட்டு, நாகர்கோவிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

<u>**சிற்றாறு-1 அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**</u>

**நாகர்கோவில்**

குமரி மாவட்டம், சிற்றாறு-1 அணையில் இருந்து பாசனத்துக்காக திங்கள்கிழமை 100 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

குமரி மாவட்டத்தில், கடந்த சில நாள்களாக சாரல் மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் பலத்த காற்றுடன் மழையும் விட்டு விட்டு பெய்கிறது. எனினும், அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் எதிர்பார்த்த அளவில் மழை இல்லை. எனினும் பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 362 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 97 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கின்றன. பேச்சிப்பாறை அணையில் இருந்து வினாடிக்கு 617 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 200 கனஅடி தண்ணீரும் வெளியேற்றப்பட்டு வருகின்றன.

மேலும், சிற்றாறு-1 அணையில் 8.50 அடி தண்ணீரும், சிற்றாறு-2 அணையில் 8.59அடி தண்ணீரும் உள்ளது. இந்நிலையில் சிற்றாறு-1 அணையில் இருந்து பாசனத்துக்காக 100 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

<u>**காய்கனி விலை கடும் உயர்வு**</u>

**ஆலங்குளம்**,

திருநெல்வேலி மாவட்டத்தில் காய்கனிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. திங்கள்கிழமை நிலவரப்படி சந்தையில் பீன்ஸ் ரூ. 70-க்கும், பீட்ரூட் ரூ. 50, தக்காளி ரூ.40-க்கும் விற்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு உள்ளூர் மற்றும் ஒட்டன்சத்திரம், ஓசூர், மேட்டுப்பாளையம், புனே போன்ற பகுதிகளிலிருந்து காய்கனிகள் வருகின்றன. காய்கனிகள் கடந்த ஓரிரு ஆண்டுகளாகவே கடுமையான விலையேற்றத்தைச் சந்தித்து வருகிறது. கடந்த ஆண்டு வெங்காயத்தின் விலை ரூ. 100 வரை ஏற்றம் கண்டிருந்தது. இதனிடையே கடந்த சில மாதங்களாக விலை சற்றே குறைந்திருந்த காய்கனிகள் தற்போது கடும் ஏற்றத்தை சந்தித்துள்ளது.

குறிப்பாக பீட்ரூட் வரலாறு காணாத வகையில் விலையேற்றத்தை கண்டுள்ளது. சாதாரணக் காலங்களில் பீட்ரூட்டின் அதிகபட்ச விலையே ரூ. 15 தான். ஆனால் தற்போது கேரட் விலைக்கு இணையாக ரூ. 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மற்ற

காய்கனிகளின் தற்போதைய விலை (திங்கள்கிழமை நிலவரம்): கேரட் 50, சவ்சவ் 25, பீன்ஸ் 70, உருளை 25, தக்காளி 40, மிளகாய் 55, இஞ்சி (பழையது) 130, புதிது 70, முருங்கை 70, வெண்டை 15, சீனி அவரை 12, கோஸ் 20, பெரிய வெங்காயம் 25, கொத்தமல்லி 50, தேங்காய் 30 என மொத்த விலைக் கடைகளில் விற்கப்படுகிறது.

இங்கிலீஷ் காய்கனி என அழைக்கப்படும் பீட்ரூட், பீன்ஸ், கேரட் போன்றவை ஒசூர், மேட்டுப்பாளையம் போன்ற இடங்களிலிருந்து வருகின்றன. அங்கு கடந்த ஆண்டு மழைப் பொழிவு இல்லாததால் 50 சதவீத அளவுக்கு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்த விலையேற்றம் கண்டுள்ளதாக ஆலங்குளம் காய்கனி வியாபாரி கிறிஸ்டோபர் தெரிவித்தார்.

எனினும் உள்ளூர் விளைச்சலான கத்தரிக்காய் ரூ. 15 எனவும் சீனி அவரை 10 ஆகவும் விற்கப்படுகிறது. பூசணிக்காயின் தேவை கேரளத்தில் அதிக அளவில் இருப்பதால் விவசாயிகளிடமிருந்து ரூ.15 க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. சாதாரண தினங்களில் இது ரூ.5 க்கும் குறைவாகவே இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## <u>பால் கொள்முதல் விலை ரூ.24 ஆக உயர்வு: முதல்வர் உத்தரவு</u>

**புதுச்சேரி**

புதுவை யூனியன் பிரதேசத்தில் பால் கொள்முதல் விலையை ரூ.20-ல் இருந்து ரூ.24 ஆக உயர்த்தி முதல்வர் ரங்கசாமி உத்தரவிட்டுள்ளார்.

புதுவை அரசின் பாண்லே நிறுவனம் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து பாலை கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்கிறது. இந்நிலையில் பெருகி வரும் கால்நடை தீவன விலை, பால் உற்பத்தி குறைவு போன்றவற்றால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், பால் கொள்முதல் விலையை ரூ. 20-ல் இருந்து ரூ. 24 ஆக உயர்த்தித் தர பாண்லேக்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார். வரும் 16-ம் தேதி (புதன்கிழமை) முதல் இந்த உத்தரவு அமலுக்கு வருகிறது.

இதன் மூலம் புதுச்சேரியில் உள்ள 7,220 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறுவார்கள். உள்ளூர் பால் உற்பத்தியின் அளவை அதிகரிக்க இது வழிவகுக்கும் என முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

**சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய பாக்கித் தொகை, கரும்பு விவசாயிகளுக்கு 15 நாட்களில் கிடைக்கும் சட்டசபையில் அமைச்சர் தகவல்**



**சென்னை,**

சட்டசபையில் நேற்று தொழில் துறை மீதான மானியக் கோரிக்கையில் பேசிய தே.மு.தி.க. உறுப்பினர் சந்திரகுமார், ‘‘சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு ரூ.840 கோடி வரை பாக்கித் தொகை வழங்க வேண்டியுள்ளது’’ என்று பேசினார்.

அப்போது இடைமறித்து பேசிய அமைச்சர் பி.தங்கமணி, ‘‘கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை ரூ.577 கோடிதான். ஆனால், உறுப்பினர் யாரோ எழுதிக் கொடுத்ததை வைத்துக்கொண்டு ஆதாரமின்றி அவையில் பேசுகிறார். கரும்பு விவசாயிகளுக்கு பாக்கி தொகை வழங்குவது குறித்து சர்க்கரை ஆலை அதிபர்களுடன் பேசப்பட்டுள்ளது.

அவர்களும் 15 நாட்களுக்குள் பாக்கித் தொகையை கொடுப்பதாக கூறியிருக்கிறார்கள். எந்தெந்த சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு எவ்வளவு பாக்கி தொகை வழங்க வேண்டியுள்ளது என்ற பட்டியல் எங்களிடம் இருக்கிறது. எனவே புள்ளி விவரங்கள் தெரியாமல் உறுப்பினர் பேசக்கூடாது'' என்றார்.

**ராயக்கோட்டையில் தக்காளி விலை உயர்வு; கிலோ ரூ.50–க்கு விற்பனை**



**ராயக்கோட்டையில்**, தக்காளி விலை கிடுகிடுவென்று உயர்ந்துள்ளது. நேற்று கிலோ ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்டது.

தக்காளி மார்க்கெட்

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையில் தக்காளி மார்க்கெட் உள்ளது. பெரிய சந்தையாக விளங்கும் இங்கிருந்து தினமும் தக்காளி வெளி மாநிலத்திற்கும், வெளி மாவட்டத்திற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ராயக்கோட்டை சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் அதிக அளவில் தக்காளி உற்பத்தி செய்து வருகிறார்கள். அவை ராயக்கோட்டையில் உள்ள தக்காளி மார்க்கெட்டிற்கு தினமும் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. இந்த நிலையல் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வரை தக்காளி விலை மிகவும் வீழ்ச்சியான நிலையில் இருந்தது.

கிலோ ரூ.50–க்கு விற்பனை

கிலோ ரூ.5 மற்றும் ரூ.6–க்கு விற்பனை செய்யப்பட்டது. பின்னர் படிப்படியாக உயர்ந்து கடந்த 15 நாட்களுக்கு முன்பு தக்காளி கிலோ ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று காலை தக்காளி கிலோ ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்டது. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

தற்போது போதிய அளவில் மழை இல்லை. இதனால் அதிக அளவில் விவசாயிகள் தக்காளி பயிரிடவில்லை. இதனால் உற்பத்தி குறைவாக உள்ளது, இதன் காரணமாக தக்காளி தேவை அதிகரித்துள்ளது. அதனால் விலையும் உயர்ந்துள்ளது.

இவ்வாறு விவசாயிகள் கூறினார்கள். தக்காளி விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே நேரத்தில் இந்த விலை உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

<u>விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சி</u>



**வாடிப்பட்டி,**

மதுரையை அடுத்த வாடிப்பட்டி வேளாண்மை கோட்டம் விராலிப்பட்டியில் மதுரை வேளாண்மைக்கல்லூரி 4ஆம் ஆண்டு கிராம தங்கல் திட்ட மாணவிகள்

விவசாயிகளுக்கு வாழைக்கன்று, மக்காசோளம் விதைநேர்த்தி, தென்னை ஊட்டசத்து பற்றிய செயல் விளக்க பயிற்சி முகாம் நடத்தினர். இதில் பஞ்சாயத்து தலைவர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். இதில் வாழைக்கன்று நேர்த்தி செயல் விளக்கம் பற்றி விளக்கி பேசப்பட்டது. அதில் ஒன்று முதல் 2 கிலோ எடையுள்ள மூன்று மாத வாழைக்கன்றினை தேர்ந்தெடுத்து, கன்றின் அடிப்பகுதி வேரை நீக்கி 5 நிமிடம் சேற்றுக்குழம்பில் நனைக்கவேண்டும். அதில் 3ஜி கார்போபியூரான் குருணை மருந்தினை கன்றில் மேல் தூவவேண்டும் என்று கூறப்பட்டது. இதனை மாணவி அன்சுகுமாரி செய்து காண்பித்தார். மேலும் விவசாயநிலத்தில் நீரை சேகரிப்பது, மக்காசோள விதை நேர்த்தி, தென்னைமர ஊட்டசத்து ஆகியவை பற்றியும் மாணவிகள் செய்து காண்பித்தனர். இதில் மாணவிகள் அஜனா, அம்பிகாதேவி, ஆனந்தவள்ளி, ஆறுமுகசெல்வி, பாக்கியலெட்சுமி, தீபகா மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**<u>கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை பருவம் தொடக்கம்</u>**



**கள்ளக்குறிச்சி**, கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவை பருவம் இன்று தொடங்குவதால் பயிர் செய்யப்பட்ட கரும்புகளை வெட்டி டிராக்டர்களில் அனுப்பும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கரும்பு அரவை பருவம் தொடக்கம்

மூங்கில்துறைப்பட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலை 2014–2015 ஆண்டுக்காண கரும்பு அரவை பருவம் இன்று காலை தொடங்குகிறது. அதை யொட்டி, மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் பொருவளூர், ஈருடையான்பட்டு, கடுவனூர், பகண்டை கூட்டு ரோடு, அத்தியூர், அரியலூர், கானாங் காடு, புதுப்பட்டு, பாக்கம்,

புதூர், பிரம்மகுண்டம், வட பொன்பரப்பி மற்றும் திருவண்ணாமலை மாவட் டத்தில் உள்ள வாழ வச்சனூர், கொட்டையூர், பெருந் துறைப்பட்டு, கரும்பலூர், மேலந்தல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த கரும்பு விவசாயிகள் தங்களது விளைநிலங்களில் பயிரிடப் பட்டிருந்த கரும்புகளை வெட்டி 100–க்கும் மேற்பட்ட லாரிகள், டிராக்டர்கள் மூலம் ஆலைக்கு அனுப்பி வருகின்றனர்.

விவசாயிகள் மகிழ்ச்சி

ஆலையின் அரவை பருவம் இன்று காலை தொடங்குவதால் மூங்கில்துறைப்பட்டு சர்க் கரை ஆலை அலுவல கத்தில் பதிவு செய்த வாகனங்கள் கள்ளக்குறிச்சி– திரு வண்ணா மலை சாலையில் சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீண்ட வரிசையில் நிற்கிறது. சர்க்கரை ஆலையில் அரவை பருவம் தொடங் குவதை யொட்டி கரும்பு விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் வாழை விவசாயிகளுக்கு ரூ.59 லட்சம் காப்பீட்டு தொகை கலெக்டர் ரவிகுமார் தகவல்**



**தூத்துக்குடி,** மாவட்டத்தில் வாழைப்பயிருக்கு காப்பீடு செய்த 233 பேருக்கு ரூ.59 லட்சம் காப்பீட்டு தொகை பெறப்பட்டு உள்ளதாக கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் நேற்று மதியம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

வாழை பயிர் காப்பீடு

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2012–13–ம் ஆண்டில் வாழைப்பயிரிட்டு, இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, காப்பீட்டு தொகை பெறப்பட்டு உள்ளது.

அதன்படி மாவட்டத்தில் பெருங்குளம், புதுக்கோட்டை, ஆறுமுகமங்கலம், வெங்கடேசபுரம், சாத்தான்குளம், உடன்குடி ஆகிய 6 பிர்க்காக்களை சேர்ந்த 233 பேருக்கு ரூ.59 லட்சத்து 2 ஆயிரத்து 434 பெறப்பட்டு இருக்கிறது. இந்த தொகை விரைவில் வழங்கப்படும்.

<u>கப்பல் கட்டும் தளம்</u>

தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் அமைக்க 3 இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. துறைமுகம் அருகே இடத்தை தேர்வு செய்ய அரசு அறிவுறுத்தி உள்ளது. ஆனால் துறைமுகம் சார்பில் போதுமான இடம் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து அரசுக்கு தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

தடுப்பணைகளில் கழிவுகள் தேங்கி விடுவதால் தண்ணீர் மாசுபட்டு காணப்படுகிறது. எனவே, இனி கட்டப்படும் தடுப்பணைகளின் ஒரு பகுதியில் தண்ணீரை திறந்து விடுவதற்கு வசதியாக கட்டப்படும்.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்தார்.

கால்நடைத்துறையில் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட ஒருவருக்கு பணி நியமன ஆணையை மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் வழங்கினார்.

**<u>தேனி மாவட்டத்தில் சாரல் மழை இரவில் குளிர் காற்று வீசுகிறது</u>**



**தேனி**, மாவட்டத்தில் சாரல் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இரவு நேரத்தில் குளிர் காற்றும் வீசுகிறது.

பருவமழை

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. கேரள மாநிலத்தின் அண்டை மாவட்டமான தேனியில் இந்த பருவக்காற்று சாரல் மழையாக பெய்வது வழக்கம். ஆண்டு தோறும் ஜூன் முதல் வாரத்தில் தொடங்கும் இந்த பருவமழை இந்த ஆண்டு தாமதமாக தற்போது தான் பெய்ய தொடங்கி உள்ளது.

அந்த வகையில் கடந்த சில தினங்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. கோட்டூர், சின்னமனூர், போடி, கம்பம், உத்தமபாளையம், கூடலூர், ஆண்டிப்பட்டி பகுதிகளில் விட்டுவிட்டு சாரல் மழை பெய்து வருகிறது. தேனி நகர், பெரியகுளம், தேவதானப்பட்டி பகுதிகளில் லேசான சாரல் மழை பெய்தது. வெயில் குறைந்து இதமான காலநிலை நிலவி வருகிறது. கடமலை–மயிலை ஒன்றிய பகுதிகளில் உள்ள வெள்ளிமலை, அரசரடி, கோம்பைத்தொழு போன்ற மலை கிராமங்களில் பலத்த காற்று வீசி வந்தது. இந்த நிலையில் கடந்த சில தினங் களுக்கு முன்பு மேகமலை வனப்பகுதியை ஒட்டிய கோம்பைத்தொழு, மண்ணூத்து போன்ற கிராமங்களில் பெய்த சாரல் மழையால் மேகமலை அருவி யில் நீர்வர தொடங்கி உள்ளது.

விவசாயிகள் மகிழ்ச்சி

கடமலை–மயிலை ஒன்றிய கிராமங்களான கடமலைக் குண்டு, வருசநாடு பகுதிகளில் இரவு நேரங்களில் மட்டும் லேசான சாரல் மழை பெய்தது. இதன் காரணமாக இரவு நேரங்களில் கடும் குளிர் காற்று வீசி வருகிறது. தொடர்ந்து சாரல் மழையுடன் பலத்த காற்றும் வீசி வருவதால் இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் அவதி அடைந்து வருகின்றனர். இதனால் பல மாதங்களாக வறண்ட நிலையில் காணப் படும் வைகை ஆற்றில் நீர் வரத்து ஏற்படும். கம்பம், கூடலூர், உத்தம பாளையம் பகுதிகளில் பெய்து வரும் சாரல் மழையால் கம்பம் பள்ளத்தாக்கு பாசன பகுதி களில் முதல் போக சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த சில மாதங்களாக வெயில் வாட்டி

வந்த நிலையில் தற்போது தொடங்கிய சாரல் மழையால் தேனி மாவட்ட மக்களும், விவசாயிகளும் ஆறுதல் அடைந்துள்ளனர்.

தினகரன்

**<u>கர்நாடகாவில் மழை, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கும்</u>**




**திருச்சி**: கர்நாடகாவில் மழை தீவிரமடைந்துள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.கடந்த ஜூன் மாதம் 6ம் தேதி தென்மேற்கு பருவமழை தொடங்கியது. எதிர்பார்த்த மழை இல்லாததால், கர்நாடக அணை களுக்கு நீர்வரத்து குறைவாகவே இருந்தது. கடந்த 15 தினங்களுக்கு முன் கேரள மாநிலம் வயநாடு பகுதியில் ஒருவாரம் தொடர் மழை கொட்டியது. இதனால் கர்நாடகாவில் உள்ள கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரித்து அணை நிரம்பியது. உபரி நீர் மேட்டூர் அணைக்கு ஒருவாரமாக வந்தது.

மேட்டூர் நீர்மட்டம் 47.410 அடியானது.கேரளாவில் மழை குறைந்ததால் கபினியில் இருந்து வரும் உபரி நீர் நின்றது.

தற்போது காவிரி உற்பத்தியாகும் கர்நாடக மாநிலம் குடகு மாவட்டத் தில் கடந்த 3 தினங்களாக பலத்த மழை கொட்டுகிறது. அங்குள்ள காவிரி யின் கிளை நதிகளில் வெள்ளம் ஏற்பட்டு கர்நாடக அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளது. குடகு மாவட்டம் தலைக்காவிரி, மடிகேரி, பாகமண்டலா, சிமோகா, சிக்மகளூர், தட்சிண கன்னடா, பத்ராவதி, தீர்த்தஹள்ளி உள்ளிட்ட பகுதிகள் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. இங்குள்ள சிறிய அணைகளும் நிரம்பி வருகின்றன.

தற்போது பெய்யும் மழை ஒருவாரம் நீடித்தால் கர்நாடகாவின் பெரிய அணையான கிருஷ்ணராஜசாகர் நிரம்பும். அந்த அணை நிரம்பினால்தான் அதன் உபரி நீர் மேட்டூர் அணைக்கு வரும். இந்த மழை காரணமாக கபினி அணைக்கும் நீர் வரத்து அதிகரித்து உள்ளது. வினாடிக்கு 16,000 கனஅடி தண்ணீர் கபினிக்கு வருகிறது. அங்கிருந்து தற்போது 1,000 கனஅடி மட்டுமே திறக்கப்படுகிறது. ஏற்கனவே கபினி அணை நிரம்பி உள்ளதால் இன்று அங்கிருந்து மேலும் அதிக அளவு தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளது.தென்மேற்கு பருவமழை ஆகஸ்ட் இறுதி வரை பெய்யும். அதற்குள் கர்நாடக அணைகள் நிரம்பினால் தான் மேட்டூருக்கு அதிக தண்ணீர் கிடைக்கும்.

**தோட்டக்கலை துறையில் உதவி இயக்குனர் பணியிடங்கள் நிரப்ப விவசாயிகள் கோரிக்கை**

**தர்மபுரி**, : தர்மபுரி மாவட்ட தோட்டக்கலைத் துறையில் காலியாக உள்ள 7 உதவி இயக்குனர்கள் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.'

தர்மபுரி மாவட்ட தோட்டக்கலை துறையில் 8 ஒன்றியத்திற்கும் ஒரு உதவி இயக்குனர் பதவி உள்ளது. இது தவிர மாவட்ட துணை இயக்குனர்

அலுவலகத்தில் ஒரு உதவி இயக்குனர் பதவியிடம் என மொத்தம் 9 உதவி இயக்குனர்கள் பணியிடம் உள்ளது. அதில் தற்போது பென்னாகரம், அரூர் ஆகிய 2 இடங்களுக்கு மட்டுமே உதவி இயக்குனர்கள் உள்ளனர். மற்ற 7 உதவி இயக்குனர் பணியிடங்கள் கடந்த சில மாதங்களாக காலியாகவே இருந்து வருகிறது.

மேலும் துணை இயக்குனராக இருந்த கலைசெல்வி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு இணை இயக்குனராக பதவி உயர்வு பெற்று, தர்மபுரி துணை இயக்குனராக (பொறுப்பு) உள்ளார். இது பற்றி விவசாயிகள் கூறியதாவது: அரூர் ஒன்றியத்திற்கான உதவி இயக்குனர் பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர் ஆகிய ஒன்றியங்களுக்கான பணிகளை கூடுதலாக கவனித்துக் கொள்கிறார். பென்னாகரம் ஒன்றியத்துக்கான உதவி இயக்குனர் தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம் துணை இயக்குனர் அலுவலகம் ஆகிய 4 இடங்களுக்கான பணிகளை கவனித்துக் கொள்கிறார். பாலக்கோடு, காரிமங்கலம் ஆகிய 2 ஒன்றியங்களுக்கு தற்போது தோட்டக்கலை அலுவலர்களே உதவி இயக்குனர் பணிகளை நிர்வகிக்கின்றனர்.

ஒரே உதவி இயக்குனருக்கு 3 அல்லது 4 ஒன்றியங்களை கவனிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதால், துறை சார்ந்த பணிகள் தேக்க நிலையை அடைந்துள்ளன. இதனால் தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு அரசின் திட்டங்கள் சென்று சேர்வதில் மந்த நிலையாக உள்ளது. தோட்டக்கலை துறையில் காலியாக உள்ள துணை இயக்குனர், 7 உதவி இயக்குனர் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.